06 52699662

## நீங்களும் B.A தமிழ்ப் பட்டவாளர் ( பட்டகர்) ஆகலாம்

1999ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் இணைய மாநாட்டில் உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் பேசும் மாணவர்கள் இணையத்தின் மூலம் தமிழைக் கற்றுப் பயன்பெற வசதி செய்யப்படல் வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ஏற்ப 2001 பெப்ரவரி 17ஆம் நாள் தமிழக முதல்வரால் தொடக்கிவைக்கப்பட்டது. தமிழ் இணையக் கல்விக்கழகம் இது தமிழ்நாட்டு அரசினால் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி நிறுவனமாகும்.

## தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகமும் தமிழ் இணையக்கல்விக் கழகமும்

### UNIVERSITY OF THANJAVUR & TAMIL VIRTUAL ACADEMY

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டம் அணியம் செய்தல், கற்கை நெறிகளின் மேற்பார்வை, தேர்வுகள், சான்றிதழ் வழங்கல் என்பன யாவுமே இந்தியாவின் புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களுள் ஒன்றான தஞ்சாவூர்ப் பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்றன.

யாருக்குப் பட்டப்படிப்பு?

- ஆசிரியர்கள்
- பெற்றோர்கள்
- மாணவர்கள்
- ஆர்வலர்கள்

அகவை வேறுபாடுயின்றி அனைவரும் பட்டப்படிப்பினை மேற்கொள்ள முடியும்.



## நீங்கள் தொழில் புரிபவரா?

அல்லது தொலை தூரங்களில் வசிப்பவரா? எமது பள்ளிகள் ஊடாகவும், அஞ்சல் மூல கற்கை நெறி வாயிலாகவும் பட்டவாளர் ஆகலாம்.

### இப் பட்டம் உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

இப்பட்டப்படிப்பு தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மூலம் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகிறது. உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்பட்டம் தாயகத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவாலும் (University Grant Commission) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## எவ்வாறு பட்டப்படிப்பினை மேற்கொள்வது?

பிரான்சு தமிழ்ச்சோலைப் பணியகத்தினூடாக மேற்கொள்ள முடியும். வீட்டிலிருந்தவாறே கற்றுக் கொள்ள முடியும். ஓய்வு நேரங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி எதிர்கால எமது இளந்தலைமுறையினருக்கு வளமானதொரு தமிழ்மொழி அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

## கல்வித்தகுதி

க.பொ.த. (உ/த) தேர்ச்சி பெறாதவர்கள்

க.பொ.த. (உ/த) தேர்ச்சி பெற்றவர்கள்

க.பொ.த. (உ/த) தேர்ச்சிக்கு இணையான ஏனைய தேர்ச்சி

நுழைவுத் தேர்வு - (Entrance Exam) தேர்ச்சி

## தேர்வு முறை

ஒவ்வொரு பாடமும் இரண்டு கட்டங்களையுடையன

1. இணையவழித் தேர்வு 2. எழுத்துத் தேர்வு